# பரலோகத்தில் அருமையானவர்களின் ஒன்றுகூடுதல் உள்ளதா?

## 1. மனிதரின் பார்வையில்

அநேகர் மரணத்தைப் பற்றி நினைப்பதையோ அல்லது அதைப் பற்றி பேசுவதையோ விரும்புவதில்லை.

- சரிர மரணம் என்பது நமது வாழ்க்கைச் சக்கரத்தில் ஒரு அங்கமாக இருப்பதை அறிந்திருந்தும் **அநேகர் என்றென்றும் வாழவே விரும்புகின்றனர**; (அப்படி வாழ்க்கை நோயும் பிரச்சனையும் இல்லாததாய் அமையுமானால்).
- இந்த முக்கியமான கேள்விக்கு **அநேகரால் தகுந்த பதிலைக் கூற முடிவதில்லை.** மனிதனின் பார்வையில; **கல்லறைக்கு அப்பால் என்ன நடக்கிறது என்பது யாருக்கும் தெரியாது.**
- நமக்கு இவ்வளவுதான் தெரியும்: ஒருவர் மரிக்கும்போது அவரது **உடல் எரிக்கப்படும் அல்லது புதைக்கப்படும்.** அவரது சாம்பல் பூமியின் மண்ணோடு மண்ணாகிறது. அதற்குமேல், மனிதர் என்ற முறையில் என்ன நடக்கிறது என்பதை நாம் அறியோம்.
- **முற்றிலும் பொருள் சம்மந்தமான உலகில் நம்பிக்கை கொண்டோர் மரணத்துக்குப் பிறகு வாழ்வில்லை என்றே நினைக்கின்றனர**;.
- எனவே, மனிதனின் பார்வையில், **நமது அருமையானவர்களின் ஒன்றுகூடுதல**; உண்டா எனும் கேள்விக்கு பதில் ஒருவரிடமும் இல்லை.
  இருப்பினும், ஆண்டவரின் பார்வையில் ஒருவர் மரணத்துக்குப் பயப்படாமல் ஆயத்தமாக முடியும் என்று நான் நம்புகிறேன்.

## 2. ஆண்டவரின் பார்வையில்

**நம்மைப் படைத்தவராகிய ஆண்டவர் ஒருவரே கல்லறைக்கு அப்பால் என்ன நடக்கிறது என்பதை அறிந்தவராவார்.** அவர் அதைப் பற்றி என்ன கூறுகிறார்? நான் கிறிஸ்துவ பரிசுத்த வேதாகமத்தை ஆராய்ந்தபோது பின்வருபவற்றை கண்டறிந்தேன்:

லூக்கா 16:19-23-ம் வசனங்களில், தேவகுமாரானாகிய இயேசு கூறினார்,"ஐசவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான். லாசரு என்னும் போர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான் ;; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்;; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று.‘‘.

- "பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிராகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்;;‘‘
- "ஐசவரியவானும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப் படுகிறபோது,..‘‘

**எனவே, ஆண்டவரின் வசனத்தின்படி, ஒரு பரலோகமும் ஒரு நரகமும் உள்ளது.**

- ❑ **பரலோகம் எப்படிப்பட்டது?**

- பரலோகம் ஒரு அருமையான இடமாகும். அப்போஸ்தலர் யோவான் வெளிப்படுத்தல் 21:11,22,23,25,27 வசனங்களில் இவ்வாறு எழுதியுள்ளார்.
- "அதின் (பரலோகம், புதிய எருசலேம்) பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப்போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப்போலவும் இருந்தது. ஆதிலே தேவாலயத்தை நான் காணவில்லை; சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம். விசுவாசிகள் ஆண்டவரை ஆராதிப்பதற்கு ஒன்றுகூடினர்.‘‘
- "நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சு{ரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையயே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு.‘‘
- "அங்கே இராக்காலம் இல்லாதபடியால், அதின் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதே இல்லை. தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்.‘‘

**பரலோகம் என்பது விசுவாசிகள் ஒருவரை ஒருவர் பார்த்து ஜீவனுள்ள ஆண்டவரை ஆராதித்து கொண்டாடுகிற ஒரு இடமாகும்**

- ❑ **நரகம் என்பது எப்படிப்பட்டது அங்கு யார் இருப்பார்?**
  வெளிப்படுத்தல் 20:10 கூறுகிறது,

- "மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான்‘‘
- "மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய. அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்.‘‘
  லூக்கா 16:23-31 ஆகிய வசனங்களில் இயேசு தொர்ந்து கூறுகிறார்),
- "பாதாளத்திலே அவன் (ஐசவரியவான்) வேதனைப் படுகிறபோது, தன் கண்களை

ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே வாசருவையும் கண்டான். “

- " அப்பொழுது அவன் தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனப்பவேண்டும்;; இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்.“
- "அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக்“

❑ **நரகத்திலிருந்து உனக்கும் எனக்கும் ஒரு விண்ணப்பம் !**

அப்பொழுது அவன் (ஐசவரியவான்)

- "அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்துபோர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்பொருட்டு, நீர் அவனைஎன் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான் “

ஆபிரகாம் அவனை நோக்கி:

- "அவர்களுக்கு மேசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான் “ அதற்கு அவன் (ஐசவரியவான்)
- "அப்படியல்ல தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மன்திரும்புவார்கள் என்றான். ஆதற்கு அவன் (ஆபிரகாம்): அவர்கள் மேசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள் என்று சொன்னான் “
- இயேசு நரகத்தை இவ்வாறு வர்ணிக்கிறார்: "புறம்பான இருள், அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் “(மத்தேயு 25:30). இருளிலே ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள முடியாது. அங்கே நரகத்தில் ஒன்றுகூடுதலும் கொண்டாட்டமும் இல்லை.

**நரகம் என்பது இருள், நெருப்பு, நிறைந்த இடமாகும்**

இதைப்பற்றி எண்ணிப்பார். அது செல்வதற்கு மிகவும் மோசமான இடமாகும்.

நீ கேட்கலாம்,"நான் பரலோகம் போவேன் என்பதை நான் எப்படி உறுதி செய்யலாம்?“

யோவான் 3:16-ல் நாம் இவ்வாறு படிக்கிறோம்,"தேவன் தம்முடைடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிற எவனும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.“ ஆமாம், இறுதியில் நீ இங்கே பூமியில் கிறிஸ்துவை உனது இரட்சகராகவும் கர்த்தராகவும் ஏற்றுக்கொள்வதன் வழி நீ பரலோகம் போவதை உறுதிசெய்யலாம்.

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது எப்படி?

மலும் விவரங்களுக்கு 82603528 என்ற எண்ணில்
சு. சங்கரன் என்பவரைத்
தொடர்புகொள்ளவும்.
மின் அஞ்சல்: nedungat@gmail.com
டிச ளரசக: www.amazingdiscovery.net

தொடர்ந்து கிறிஸ்துவ வாழ்வில்
வளர்ச்சி அடைய இயேசுவை கனம்பண்ணுவதோடு
வேதாகமத்தைக் கற்றுத்தரக்கூடிய, அருகாமையில்
உள்ள ஒரு சபைக்குத் தொடர்ந்து செல்.